5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தொழிலாளர்கள், தொழிற்சாலைகள்' பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாம் அறிக்கையை இப்பேரவையின் முன் வைக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் புதிய அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை முதன் முதலாகத் தமிழில் பேரவையின் முன் அளிப்பதைத் தனக்குக் கிடைத்த பெருமையாக மதிப்பீடுக் குழு கருதுகிறது.

6. அரசினர் மசோதா

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா
(சட்டப் பேரவை மசோதா எண் 3/1968)

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1968) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இரண்டாம் பிரிவு, குறுந்தலைப்பு, அட்டவணை முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இம் மசோதா நிறை வேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப் பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

7. ஆளுநரின் பேருரை மீது விவாதம் (தொடர்ச்சி.)

*** திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் நல்ல முறையான ஒரு உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். என்றுமே இல்லாத ஒரு முறையில் இன்றையதினம் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய யதார்த்த